டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வல்லர்ஸ்
agridoctor.in | 4.11.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 115 | Madurai | Online Edition

தேனி, கோவை மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு!

சென்னை, நவ.3

தேனி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இன்று (நவ.4) கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில், மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவிய முரசு புயல் வடக்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து 3ம் தேதி அதிகாலை 3:30 மணி முதல் காலை 5:30 மணி வரையிலான இடைப்பட்ட நேரத்தில் தெற்கு ஆந்திரப் பிரதேச கடற்கரையான நெல்லூருக்கும் நர்சாப்பூருக்கும் இடையே ஒங்கோலுக்கு மிக அருகில் கரையை கடந்தது.

இது மேலும் வடக்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து, மதியத் துக்குள் வலுவிழந்து புயலாகவும், மேலும் நள்ளிரவுக்குள் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுவிழக்கக் கூடும்.

இன்று (நவ.4) தேனி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நவ.5–ம் தேதி மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங் களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும். மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், இதர தென் தமிழகம் மற்றும் வட கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விதை விற்பனை உரிமங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்

விதை ஆய்வு துணை இயக்குனர் எச்சரிக்கை

தஞ்சாவூர், நவ.3

தஞ்சாவூர் மாவட்டத்தில் விதை விற்பனை உரிமங்கள் வைத்துள்ள விதை விற்பனையாளர்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தங்களுடைய விதை விற்பனை உரிமத்தை புதுப்பித்து கொள்ள தஞ்சாவூர் மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் சுஜாதா தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தஞ்சாவூர் மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் சுஜாதா வெளியிட்டுள்ள அறிக்கையில், பட்டுக் கோட்டை, தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் உள்ளிட்ட கோட்டங் களில் நெல், உளுந்து, நிலக்கடலை, பருத்தி, தென்னங் கன்றுகள், காய்கறி விதைகள் மற்றும் நாற்றுகள், பழச்செடிகள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் மற்றும் இவற்றை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்பவர்கள், கட்டாயம் விதை சட்ட விதிகளின்படி, விதை விற்பனை உரிமம் பெற்று விற்பனை மேற்கொள்ள வேண்டும். இதுவரை மாவட் டத்தில், அரசு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள் மூலமாக விண்ணப்பித்த விற்பனையாளர்கள் என மொத்தம் 808 விதை விற்பனையாளகளுக்கும் விதை கட்டுப்பாட்டு ஆணை 1983 ன் கீழ் 5 ஆண்டுகளுக்கு விற்பனை மேற்கொள்ள புதிய விதை விற்பனை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.

விதை விற்பனையாளர்கள், விதை உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்து விற்பனை செய்யும்போது, அவற்றின் ரகம், விலை குறிப்பிட்டுள்ள இன்வாய்ஸ் பெற்று, விதை இருப்பு பதிவேட்டில் பதிவுசெய்ய வேண்டும். விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்யும்போது, பயிர், ரகம், நிலை, அளவு, காலாவதி, உற்பத்தியாளர் விவரம், நாற்று எண்ணிக்கை, விற்பனை விலை ஆகிய விபரங்களுடன் விவசாயிகளின் கையொப்பத்துடன் ரசீது வழங்க வேண்டும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

விதை விற்பனை நிலையம் முன்பு, நிலையத்தின் பெயர் பலகையும், விதை இருப்பு மற்றும் விலைப்பட்டியல் அடங்கிய இருப்பு பலகை முழு விவரங்களுடன் வைக்க வேண்டும். விதை சட்ட விதிகளை கடைபிடிக்காமல், விதிகளைமீறி விற்பனை செய்யும் விதை விற்பனையாளர்கள் மீது விதை சட்டம் 1966 மற்றும் விதை விதிகள், 1968 ன்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

தரமான விதைகள், தென்னங்கன்றுகள் மற்றும் நாற்றுகளை விவசாயிகளுக்கு விற்பனை மேற்கொள்ள புதிய லைசென்ஸ் பெற விரும்புபவர்கள் தஞ்சாவூர் காட்டுத்தோட்டத்தில் அமைந்து உள்ள ஒருங்கிணைந்த விதை வளாகத்தில் முதல் தளத்தில் செயல்படும் விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்தில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் சமர்ப்பித்து, ரூ.1000 செலுத்தி, விதை கட்டுப்பாடு ஆணை, 1983 கீழ் புதிய லைசென்ஸ் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார். தொடர்ந்து தங்களின் விதை விற்பனை உரிமத்தை உரிமம் வழங்கப்பட்ட தேதியில் இருந்து, 5 ஆண்டுகள் முடியும் தேதியான காலகெடுவுக்குள் புதுப்பிப்பு தொகையாக ரூ.500 மட்டும் செலுத்தி, தொடர்ந்து அடுத்த 5 ஆண்டுகளுக்கு விதை விற்பனை உரிமத்தினை புதிப்பித்து, விதை சட்ட விதிகளை பின்பற்றி தரமான விதை விநியோகம் மேற்கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

உழவர் சந்தைகளில் இயற்கை விளை பொருட்கள் வாரம் ஒரு நாள் விற்பனை துவக்கம்

திருவாரூர், நவ.3

இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களை தமிழ்நாடு முழுவதும் செயல்படும் உழவர் சந்தைகளில் பிரதி வாரம் ஞாயிற்றுக்கிழமைகளில் விற்பனை செய்வதற்கும் நுகர்வோருக்கு நஞ்சில்லாத உணவு வழங்கி ஆரோக்கியமான வாழ்வை மேம்படுத்தவும் பாரம்பரிய அரிசி வகைகள் சிறுதானியங்கள் எண்ணெய் வகைகள் காய்கறி மற்றும் பழங்கள் வழங்கிட தமிழக முதல்வர் உத்தரவின் அடிப்படையில் வேளாண் துறை அமைச்சர் வழிகாட்டுதல் படியும் வேளாண் இயக்குனர் வேளாண் வணிகம், அறிவுறுத் தலின்படி திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஏழு உழவர் சந்தைகளிலும் இயற்கை விளைபொருட்கள் வாரம் ஒரு நாள் விற்பனை நிகழ்ச்சி துவக்கப்பட்டு உள்ளது.



மாவட்ட இயற்கை விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் மோகனச்சந்திரன், உழவர் சந்தையில் இயற்கை விளைபொருட்கள் வாரம் ஒரு நாள் விற்பனை நிகழ்ச்சியினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

பாரம்பரிய நெல் கவுன்சில் நிறுவனர் டாக்டர் குநாதன், தமிழகம் முழுவதும் விதை சான்று மற்றும் அங்கக சான்று துறையின் கீழ் சான்று பெற்ற காய்கறி விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை கொள் முதல் செய்து இன்றைய தினம் நுகர்வோருக்கு முதல் விற்பனையினை மாவட்ட ஆட்சியர் மற்றும் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் மூலம் நுகர்வோருக்கு வழங்கினார்.

மேலும் சிறுதானியங்களிருந்து தயாரிக்கப்பட்ட மில்லெட் மெடிசன் எனும் தொகுப்பின் மருத்துவ குணங்கள் பற்றி டாக்டர் குநாதன் அனைவருக்கும் விளக்கி கூறி நுகர்வோருக்கு வழங்கினார்..

மேலும் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் திரிகடுகம் மற்றும் மூலிகை தேநீர் வழங்கப்பட்டது. கோல்டு பிரஸ் முறையில் மரச்செக்கு மூலம் தயாரிக்கப்பட்ட கடலை எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் நுகர்வோருக்கு திருவாரூர் உழவர் சந்தையில் விற்பனை துவக்கப்பட்டு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பேசுகையில், மேலும் அதிக இயற்கை விவசாயிகளை நஞ்சில்லா உணவு நுகர்வோருக்கு கிடைக்கும் வகையில் அதிக அளவில் உழவர் சந்தைகளுக்கு விற்பனைக்கு வர வைக்க உரிய ஏற்பாடுகள் செய்திட கேட்டுக் கொண்டார்.

திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், உழவர் சந்தையில் விற்கப்படும் இயற்கை விளைபொருட்களின் தரத்தினை உறுதி செய்து நுகர்வோருக்கு வழங்க கேட்டுக் கொண்டார். இன்றைய நிகழ்ச்சியில் திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் சத்யா மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை ஜெயசீலன், வேளாண் துணை இயக்குனர் மாநிலத் திட்டம் ஹேமா எப்சிபா நிர்மலா, திருவாரூர் வட்டாட்சியர் இளங்கோ ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் இயற்கை விவசாய அங்காடியினை பாரம்பரிய நெல் கவுன்சில் டாக்டர் ரகுநாதன் மற்றும் செயற்குழு உறுப் பினர்கள் வரதராஜன் ராமஜெயம் ஆகியோர் செய்திருந்தனர். குடவாசல் தமிழக வெற்றிக்கழக தலைவர் தமிழ்மணி மற்றும் சமூக சேவகர் சூர்யா மற்றும் வினோத் ஆகியோர் விவசாயிகளை இன்றைய நிகழ்வில் ஒருங்கிணைத்தனர்.

மேலும் மாவட்ட ஆட்சியர் உழவர் சந்தையில் மரக்கன்று நடும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை திருவாரூர் உழவர் சந்தை வேளாண் அலுவலர் குணசேகரன் செய்தி இருந்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் வேளாண் துணை இயக்குனர் வேளாண் வணிகம் திலகவதி நன்றி கூறினார்.

உழவர் செயலி பயன்பாடு குறித்த விழிப்புணர்வு!



தஞ்சாவூர், நவ.3

தஞ்சாவூர் மாவட்டம், காட்டுத்தோட்டம் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட மாணவிகள், மருங்குளம் கிராம விவசாயிகளுக்கு உழவர் செயலியின் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையால் உருவாக்கப்பட்ட உழவர் செயலி (ஷீகுஜுழிஸழிஷ்டி புஸ்ரீஸ்ரீ) பயன்பாடு குறித்து வேளாண் மாணவர்கள் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தனர். இச்செயலியின் முக்கியத்துவம் மற்றும் விவசாயிகளுக்கு எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும் என்பது குறித்து எடுத்துரைத்தனர்.

முதலில், மொபைல் போனில் உழவர் செயலியைப் பதிவிறக்கம் செய்து, அதனைப் பயன்படுத்தும் முறையை மாணவர்கள் நேரடியாகச் செய்து காட்டினர். தொடர்ந்து, செயலியில் உள்ள பல்வேறு வசதிகள் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர்.

குறிப்பாக, அரசு வேளாண்மை மானியத் திட்டங்கள், பயிர்க் காப்பீடு, விதைகள் மற்றும் உரங்களின் இருப்பு விவரங்கள், வேளாண் இயந்திரங்களின் வாடகை விவரங்கள், தினசரி சந்தை விலைகள் மற்றும் வானிலை முன்னறிவிப்பு போன்ற தகவல்களை இச்செயலி மூலம் எளிதாக அறிந்துகொள்ளலாம் என்பதை விளக்கினர். மேலும், பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மற்றும் விவசாயிகளுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் குறித்த தகவல்களையும் செயலி மூலம் தெரிந்துகொள்ளலாம் என்பதை எடுத்துரைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, விவசாயிகள் தங்களது மொபைல் போனிலேயே வேளாண்மை தொடர்பான பல்வேறு தகவல் களைப் பெற்றுப் பயன்பெறலாம் என்றும், அரசு திட்டங்கள் மற்றும் மானியங்களைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள இச்செயலி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் மாணவர்கள் எடுத்துக் கூறினர்.

இச்செயல் விளக்கத்தின் மூலம் விவசாயிகள் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வேளாண்மை சார்ந்த தகவல்களை எளிதாகப் பெறுவது குறித்த விழிப்புணர்வைப் பெற்றனர்.



விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.3

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 03.11.26 அன்று, கடலூர், விருத்தாசலம் மற்றும் முஷ்ணம் வட்டாரத்தில் உள்ள கடலூர் முதுநகர், கச்சிபெருமாநத்தம், மற்றும் குமாரக்குடி ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன் துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர் கூ.சுஜெய்வேலு, முனைவர். சிவசங்கர் மற்றும் முனைவர். P.கமலக்கண்ணன் ஆகியோர் கலந்துக்கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உரபரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார்.

உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போதுமண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், கடலூர், விருத்தாசலம் மற்றும் முஷ்ணம் வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக்கொண்டு பயன் பெற்றனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

தோட்டக்கலைப் பயிர்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி!



சிவகங்கை, நவ.3

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டாரத்திற்கு உட்பட்ட குருத்தனிவயல் கிராமத்தில், காளையார்கோவில் வேளாண்மை அலுவலகத்தின் (AO Office) வழிகாட்டுதலின்படி, தோட்டக்கலைப் பயிர்களில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வுப் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவிகள், பா.மகேஸ்வரி, சு.சந்தியா, செ.யாழினி, க.விவேகா, கு.கீர்த்தனா, செ.ஸிவ ஸ்ரீ, செ.ராஜேஸ்வரி விவசாயத்தில் நவீனத் தொழில்நுட்பங்களின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் குறித்து விவசாயி களுக்கு விளக்கமளித்தனர். குறிப்பாக, பயிர்களைக் கண்காணிக்க உதவும் ட்ரோன்கள், மண்ணின் ஈரப்பதம் உள்ளிட்ட காரணிகளைக் கண்டறிய உதவும் சென்சார்கள் மற்றும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த உதவும் தானியங்கி நீர்ப்பாசன அமைப்புகள் குறித்து எடுத்துரைத்தனர்.

மேலும், மண்ணின் வளத்தை மேம்படுத்தவும், பயிர்களின் வளர்ச்சிக்கு உதவவும் உயிர் உரங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, விவசாயிகளுக்குப் பயனளிக்கும் உழவர் செயலி உள்ளிட்ட வேளாண் தொடர்பான கைப்பேசி செயலிகள் குறித்தும் விளக்கப்பட்டது. இச்செயலிகளின் மூலம் வேளாண்மை தொடர்பான தகவல்களைப் பெறுவதுடன், நவீனத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்த முடியும் என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சியின் முக்கிய நோக்கம், விவசாயிகளிடையே நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, நிலையான மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த விவசாய முறைகளை ஊக்குவிப்பதாகும்.

பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் மல்பெரி சாகுபடி குறித்து RAWE மாணவிகள் நேரடி களப்பயிற்சி!

திருச்சி, நவ.3

திருச்சி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை வட்டாரத்திற்குட்பட்ட பைத்தம்பாறை கிராமத்தில் அமைந்துள்ள பட்டுப்புழு வளர்ப்பு அலகு மற்றும் மல்பெரி தோட்டத்திற்கு இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் ஊரக வேளாண்மைப் பயிற்சித் திட்டத்தின் (RAWE 2026) கீழ் மாணவிகள் களப் பயணம் மேற்கொண்டனர்.



அங்கு பட்டுப்புழு வளர்ப்பு அலகின் உரிமையாளர் நிஜேந்திரன், பட்டுப்புழு வளர்ப்பின் முக்கியத்துவம், பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சியான முட்டை, புழு, கூட்டுப்புழு மற்றும் அந்துப்பூச்சி நிலைகள், பட்டுப்புழுக்களின் வகைகள், மல்பெரி சாகுபடி முறைகள் மற்றும் பட்டுப்புழுக்களுக்கான தீவனமாக மல்பெரி இலைகள் பயன்படும் விதம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும், பட்டுப்புழு வளர்ப்பின் மூலம் கிடைக்கும் பொருளாதார நன்மைகள், பட்டு உற்பத்தியின் முக்கியத்துவம், மல்பெரி இலைகளின் தரம் மற்றும் பட்டுப்புழுக்களைப் பராமரிக்கும் முறைகள் குறித்தும் செயல்விளக்கத்துடன் விளக்கினார்.

இந்த நேரடிக் களப்பயணத்தின் மூலம் மாணவிகள் பட்டுப்புழு வளர்ப்பு தொழில்நுட்பங்கள், மல்பெரி சாகுபடி மற்றும் பட்டு உற்பத்தி தொடர்பான பல்வேறு நடைமுறை அறிவுகளைப் பெற்றதுடன், பட்டுப்புழு வளர்ப்பை ஒரு சிறந்த துணைத் தொழிலாக மேற்கொள்ள முடியும் என்பதையும் அறிந்து கொண்டனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

உரம் வாங்கிட புதிய நடைமுறை தெரியுமா?



மத்திய அரசின் உர மானியம் மற்றும் உர முன்பதிவு பெற எ ப் . எ ப் . எ ஸ் செயலி (FRAME WORK FOR FERTILIZERS SALES) என்ற மொபைல் ஆப் உருவாக்கப்பட்டு தற்போது மதுரை, தூ த் து க் கு டி உள்ளிட்ட 19 மாவட்டங்களில் நவம்பர் முதல் வாரத்திலிருந்து அமுல்படுத்தப்படுகிறது. இந்த செயலியை (FFS APP) தமிழகம் முழுவதுமாக செயல்படுத்த வருகிற டிசம்பர் 26க்குள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எதற்காக இந்த செயலி உருவாக்கப்பட்டது தெரியுமா?

பொதுவாக விவசாயிகள் பயிர்களுக்கு யூரியாவைத் தவிர மற்ற உரங்களை வாங்கி பயன்படுத்துவது இல்லை. குறிப்பாக பொட்டாஷ் உரங்களை மிகமிக குறைவாக தான் பயன்படுத்து கின்றனர். சமச்சீரான உர நடைமுறை பெரும்பாலான விவசாயிகள் பின்பற்றுவதில்லை. இதனால் மண்வளமும் பயிர் விளைச்சலும் குறைவாகிறது. குறிப்பாக யூரியாவை அதிகமாக பயன்படுத்துவதால் அரசாங்கத்தின் மானியமும் அதிகளவில் விரயமாகிறது. இதனை சீர்படுத்தும் நோக்கில் தான் இந்த செயலி (FFS APP) கொண்டு வரப்பட்டுள்ளது.

எவ்வாறு பயன்படுத்துவது?

இந்த செயலியை பயன்படுத்த விரும்பும் விவசாயிகள் எப்.ஆர்.பதிவெண் (FARMER REGISTRATION NUMBER)

பெறுவது அவசியம். எப்.ஆர் பெறாதவர்கள் ஆதார் எண் இணைக்கபட வேண்டும். செயலில் F.R.NO பதிவு பெற்ற விவசாயிகள் விண்ணப்பித்தால், எத்தனை ஏக்கர் பயிர் சாகுபடிகேற்ப யூரியா, பொட்டாஷ், டி,ஏ,பி காம்பளக்ஸ் உரங்கள் பட்டியல் வெளிவரும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள்/ தனியார் உரக்கடைகளில் உரம் வாங்கும்போது விவசாயிகள் கடையின் பெயரை தேர்வு செய்தவுடன் (Q.R.CODE) மூலமாக டோக்கன்கள் (TOKENS) வழங்கப்படும். இந்த டோக்கனைக் கொண்டு 2 நாட்களுக்குள் உரம் வாங்கிட வேண்டும். இல்லாத பட்சத்தில் மீண்டும் உரம் வாங்கிட முடியாது. இந்த FR பதிவெண் (11 இலக்க எண்) பெறாத விவசாயிகள் இனி மானிய விலையில் உரம் வாங்குவது சிரமமே. அதே போல தனியாக உரக்கடைகளுக்கு சென்று மானிய விலையில் உரம் வாங்கிட முடியாது.

எனவே அனைத்து விவசாயிகளும் (FARMER REGISTRATION NUMBER) வாங்கிட வேண்டும். பார்மர் ஐடி எண் என்பது விவசாயிகளின் டிஜிட்டல் அடையாளமாகும். இதனை வைத்து தான் விவசாய நலத் திட்டங்களின் பயன்கள், சலுகைகள் பெற முடியும்.. மேலும் விரிவான விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையத்தை நாடவும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



நானோ விழிப்புணர்வுக் கருத்தரங்கம்

தர்மபுரி, நவ.3

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டாரம், சிக்கமரந்தஹள்ளி கிராமத்தில் இப்கோ சார்பில் விவசாயிகள் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது.



இந்நிகழ்வில், இப்கோ உதவி கள அலுவலர், இப்கோ நானோ உரங்களான நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி., நானோ ஜிங்க், நானோ காப்பர், நானோ NPK மற்றும் சாகரிகா உள்ளிட்ட திரவ உரங்களின் சிறப்பம்சங்கள், பயிர்களுக்கு வழங்கும் நன்மைகள் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும், பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்துகளைச் சரியான முறையில் வழங்குவதிலும், ஊட்டச்சத்துப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துவதிலும் நானோ உரங்களின் பங்கு குறித்தும் விளக்கினார்.

தொடர்ந்து, உயிர் உரங்கள் (Biofertilizers) மற்றும் உயிரிச் சிதைப்பான் (Bio-Decomposer) ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்து எடுத்துரைத்ததுடன், மண்ணின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தி, மண் வளத்தையும் ஆரோக்கியத்தையும் பாது காப்பதில் அவற்றின் பங்கு குறித்தும் விளக்கினார்.

மேலும், இப்கோ நானோ உரங்களை வாங்கும் விவசாயி களுக்கு வழங்கப்படும் சங்கட் ஹரன் பீமா யோஜனா விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் சிறப்பம்சங்கள்மற்றும் அதன் மூலம் கிடைக்கும் காப்பீட்டுப் பயன்கள் குறித்தும் விளக்கி, விவசாயி களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

விவசாயிகளுக்கு பஞ்சகவ்யா தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து செயல்விளக்கம்!

சேலம், நவ.3

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில் மல்லூர் கிராமத்தில், கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் (RAWE) கீழ், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம்



மற்றும் பஞ்சகவ்யாவின் பயன்பாடுகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர்.



இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் லோகேஷ், மதன், மதன்ராஜ், மணி வாசகர், முகேஷ் குமார், முகில் தர்ன், முத்து சீனிசிதம்பரம், நந்தகுமார், நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயி களுக்கு பஞ்சகவ்யா தயாரிக்கும் முறை மற்றும் அதன் பயன்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

பஞ்சகவ்யா என்பது இயற்கை முறையில் தயாரிக்கப்படும் ஒரு பயிர் வளர்ச்சி ஊக்கியாகும். இதில் பசுஞ்சாணம், பசுவின் சிறுநீர், பால், தயிர், நெய், வெல்லம், வாழைப்பழம், இளநீர் உள்ளிட்ட இயற்கைப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்பொருட்களை சரியான விகிதத்தில் கலந்து நொதிக்க வைத்து பஞ்சகவ்யா தயாரிக்கப்படுகிறது.

பஞ்சகவ்யாவை பயிர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட அளவில் தெளிப்பதன் மூலம் தாவரங்களின் வளர்ச்சி மற்றும் பூக்கும் திறனை மேம்படுத்த உதவுகிறது. மேலும், மண்ணில் நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் செயல்பாட்டை ஊக்குவித்து, பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுகிறது.

தொடர்ந்து, பஞ்சகவ்யா தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்கள், அவற்றைக் கலக்கும் முறை, நொதித்தல் காலம், சேமிக்கும் முறை மற்றும் பயிர்களுக்கு தெளிக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், இயற்கை வேளாண்மையில் கிடைக்கக்கூடிய உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் பயிர் வளர்ச்சி ஊக்கிகளைத் தயாரித்து பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் விளக்கப்பட்டது. ரசாயன இடுபொருட்களின் பயன்பாட்டைத் தேவைக்கேற்ப குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான வேளாண்மையைப் பின்பற்ற விவசாயி களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்று பஞ்சகவ்யா தயாரிப்பு மற்றும் பயன்பாடுகள் குறித்த தங்களது சந்தேகங்களைக் கேட்டறிந்தனர். மாணவர்கள் அவற்றுக்கு உரிய விளக்கங்களை அளித்தனர்.

பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி விடுவிப்பு நிகழ்வு இணைய ஒளிபரப்பு

கன்னியாகுமரி, நவ.3

கன்னியாகுமரி மாவட்டம், திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி (PM-KISAN) திட்டத்தின் 24-வது தவணைத் தொகையை பிரதமர் நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் பனஸ்கந்தா மாவட்டத்தில் இருந்து நாடு முழுவதும் உள்ள 9.34 கோடி தகுதியான விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக தலா ரூ,2,000 வீதம் மொத்தமாக ரூ.18,690 கோடி விடுவிக்கும் நேரலை நிகழ்ச்சி 30.10.26 அன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் சா சுரேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி இத்திட்டத்தின் நன்மைகள் மற்றும் தொடர்ந்து பல விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுமாறு எடுத்து கூறினார்.

மேலும் உரங்களின் சமச்சீர் நிர்வாகம், பசுந்தாள் உரப் பயிர்கள் பயன்பாடு மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இணை பேராசிரியர் முனைவர் நஸ்கரீன் ஹாசன், வாழையில் ஒருங் கிணைத்த உர மேலாண்மையை குறித்து விளக்கமளித்தார். இணை பேராசிரியர் முனைவர் கு.கவிதா, உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் அங்கக பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து பயிற்சி அளித்தார். தொடர்ந்து நெல்லில் பேசில்லஸ் சப்டிலிஸ் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யும் தொழில்நுட்பங்கள் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. விவசாயி களுக்கு நெல் பயிருக்கு இயற்கை முறையில் பயிர் பாதுகாப்பு அளிக்கக்கூடிய பேசில்லஸ் சப்டிலிஸ், பஞ்சகாவியா மற்றும் மீன் அமிலம் ஆகிய அங்கக இடுப்பொருள்கள் வழங்கப்பட்டது.

பயிர்களுக்கு தேவையான இயற்கை இடுபொருட்கள் வாங் கவும் இதனை சார்ந்த தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்ளவும் திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 136 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

வேளாண்மைக் கல்லூரி மாணவர்களின் பங்கேற்புடன் நடுவூர் கிராமத்தில் கிராமப்புற மதிப்பீட்டுத் திட்டம்!



சேலம், நவ.3

பெரம்பலூர், தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள், தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம், நடுவூர் கிராமத்தில் பங்கேற்புடன் கிராமப்புற மதிப்பீட்டுத் திட்டத்தை (Participatory Rural Appraisal – PRA) மேற்கொண்டனர். இத்திட்டத்தில் கிராம மக்களின் நேரடிப் பங்கேற்புடன், கிராமத்தின் தற்போதைய நிலை, இயற்கை வளங்கள், வேளாண் முறைகள், வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் சமூகக் கட்டமைப்புகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இதன் ஒரு பகுதியாக, சமூக வரைபடம் (Social Map), வள வரைபடம் (Resource Map), கால வரிசை வரைபடம் (Timeline), வென் வரைபடம் (Venn Diagram), செல்வநிலை வகைப்பாடு (Wealth Ranking), பருவகால வரைபடம் (Seasonal Calendar) மற்றும் பயிர் சாகுபடி வரைபடம் (Crop Calendar) போன்ற PRA கருவிகள் பயன் படுத்தப்பட்டன.

இந்த வரைபடங்கள் மற்றும் மதிப்பீட்டுக் கருவிகள் மூலம் கிராமத்தின் மக்கள் தொகை அமைப்பு, குடிநீர் வசதி, சாலை வசதிகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகள், விவசாய நிலங்கள், நீர்வள ஆதாரங்கள் மற்றும் இயற்கை வளங்கள் குறித்த தகவல்கள் அறியப்பட்டன. மேலும், கிராம மக்களின் முக்கியப் பிரச்சினைகள், வேளாண் சவால்கள் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. கிராம மக்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி, அவர்களின் அனுபவங்கள் மற்றும் கருத்துகளின் அடிப்படையில் கிராமத்தின் தற்போதைய நிலை மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் மூலம் கிராமத்தின் அடிப்படைத் தேவைகள் மற்றும் முன்னுரிமையான வளர்ச்சிப் பணிகளைக் கண்டறிய மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.

கிராம மக்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இப்பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டுச் செயல்பாடு, கிராமத்தின் வளங்களைக் கண்டறிந்து, உள்ளூர் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, நிலை யான கிராமப்புற வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்தது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

நெல் வயல் பூச்சிகளைக் கண்காணிக்க மஞ்சள் நிற ஒட்டும் பொறி வேளாண் மாணவர்கள் செயல்விளக்கம்



திருவாரூர், நவ.3

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், நெடுஞ்சேரி கிராமத்தில் வேளாண் கல்லூரி மாணவர்கள் நெல் வயலில் மஞ்சள் நிற ஒட்டும் பொறி (Yellow Sticky Trap) அமைப்பது குறித்த செயல்விளக்கத்தை விவசாயிகளுக்கு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின் நோக்கம், நெல் பயிரில் காணப்படும் பூச்சி களைக் கண்டறிதல், அவற்றின் நடமாட்டத்தைக் கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளை ஊக்கு வித்தல் ஆகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை விரிவாக்கம் மற்றும் கிராமப்புற விழிப்புணர்வு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, மஞ்சள் நிற ஒட்டும் பொறியின் பயன்பாடு குறித்து மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

மஞ்சள் நிற ஒட்டும் பொறியின் நன்மைகள்

வயலில் பூச்சிகளின் வருகையை ஆரம்பத்திலேயே கண்டறிய உதவுகிறது. பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறதா என்பதைக் கண்காணிக்க உதவுகிறது. தேவையற்ற பூச்சிக் கொல்லிப் பயன் பாட்டைக் குறைக்க உதவும் முடிவுகளை எடுக்க ஆதரவளிக்கிறது. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறையில் பயனுள்ள கருவியாகச் செயல்படுகிறது. பூச்சிகளைக் கண்காணிக்க எளிய மற்றும் குறைந்த செலவிலான முறையை வழங்குகிறது.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விளக்கம்

செயல்விளக்கத்தின் போது, மஞ்சள் நிற ஒட்டும் பொறிகள் பூச்சி களைக் கண்காணிக்க உதவினாலும், நெல் பயிரில் காணப்படும் அனைத்து பூச்சிகளையும் கட்டுப்படுத்தாது என்பதை மாணவர்கள் எடுத்துரைத்தனர். குறிப்பாக, நெல் தண்டு துளைப்பான், இலைச் சுருட்டுப்புழு போன்ற புழுக்களைக் கண்காணிக்க வயலில் நேரடி ஆய்வு மேற்கொள்வது அவசியம் என்றும் விளக்கினர்.

மேலும், பொறியில் சிக்கிய பூச்சிகளை அடையாளம் கண்டு, அவற்றின் எண்ணிக்கையைப் பதிவு செய்து, பயிரின் நிலையைத் தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் சரியான பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தேர்வு செய்யலாம் என அறிவுறுத்தினர்.

இந்தச் செயல்விளக்கத்தின் மூலம் நெடுஞ்சேரி கிராம விவசாயி களுக்கு மஞ்சள் நிற ஒட்டும் பொறியின் பயன்பாடு, பூச்சிகளைக் கண்காணிக்கும் முறை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஒருங்கிணைந்த பண்ணை முறையைப் பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருப்பத்தூர், நவ.3

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, திருப்பத்தூர் மாவட்டம் வெள்ளக்குட்டையில் அமைந்துள்ள AR FARMS பண்ணைக்கு நவம்பர் 2ஆம் தேதி களப்பயணம் மேற்கொண்டனர்.

இப்பயணத்தின் போது ஒருங்கிணைந்த பண்ணைய முறை (Integrated Farming System) குறித்து மாணவர்கள் விரிவாக அறிந்து கொண்டனர். இப்பண்ணையில் மாடு, ஆடு, செம்மறியாடு, வாத்து, நாய்கள் மற்றும் பல்வேறு பறவைகள் வளர்க்கப்படுவதைப் பார்வையிட்டனர்.

மேலும், கால்நடை வளர்ப்பு, கோழி மற்றும் வாத்து வளர்ப்பு, இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், பண்ணைக் கழிவுகளை உரமாக மாற்றுதல் மற்றும் விவசாயத்துடன் கால்நடை வளர்ப்பை இணைத்து கூடுதல் வருமானம் பெறும் முறைகள் குறித்து தெரிந்து கொண்டனர்.

இந்தக் களப்பயணம் மூலம் ஒருங்கிணைந்த பண்ணைய முறையின் முக்கியத்துவம், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல், இடுபொருள் செலவைக் குறைத்தல் மற்றும் நிலையான வேளாண்மையை மேம்படுத்துதல் போன்ற பயன்களை மாணவர்கள் நேரடியாக அறிந்து கொண்டனர்.

சிறுதானிய சாகுபடியில் இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு மற்றும் விதை நேர்த்தி செயல்விளக்கம்!



கிருஷ்ணகிரி, நவ.3 அதியமான் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சியில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் (RAWE – Rural Agricultural Work Experience) ஈடுபட்டு வருகின்றனர்.

இத்திட்டம் 80 நாட்கள் நடைபெறும் களப்பயிற்சித் திட்டமாகும். இதன் முக்கிய நோக்கம், வேளாண் மாணவர்கள் கிராமப் புறங்களில் விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அவர்களின் விவசாய நடைமுறைகள், பிரச்சினைகள் மற்றும் தேவைகளை அறிந்துகொள்வதுடன், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்துவதாகும்.

அதன்படி, வேப்பனப்பள்ளி வட்டாரம், பி.கே. பேத்தனப்பள்ளி கிராமத்தில் விவசாயிகளுக்கான இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல் மற்றும் விதை நேர்த்தி குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி 30.10.26 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பஞ்சகவ்யா, தசகவ்யா, அமிர்தக் கரைசல், ஜீவாமிர்தம், மோர் கரைசல், மீன் அமிலம், வேப்பிலைச் சாறு, வேப்பங்கொட்டை கரைசல், புங்கம் விதைச் சாறு மற்றும் 3ஜி கரைசல் போன்ற இயற்கை இடுபொருட்களைத் தயாரிக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், ராகி (கேழ்வரகு) விதைகளுக்கு டிரைக்கோடெர்மா விரிடி (Trichoderma viride) கொண்டு விதை நேர்த்தி செய்யும் முறையும் செயல்விளக்கத்தின் மூலம் எடுத்துரைக்கப்பட்டது. விதை நேர்த்தியின் முக்கியத்துவம், விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஆரோக்கியமான பயிர் வளர்ச்சியை ஊக்குவித்தல் போன்ற நன்மைகள் குறித்தும் விளக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகள் இயற்கை இடுபொருட்களின் பயன்பாடு, விதை நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான வேளாண்மை முறைகள் குறித்த பயனுள்ள தகவல்களைப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் நான்காம் ஆண்டு வேளாண் மாணவர்களான பரணிதரன்.சே, வீராசாமி.கா, சஞ்சய்.ர, தனுஷ்ராஜ்.த, திருமலை.ரா, ரஞ்சித்.ப, சகுனாஸ்.ச, ராகுல் கணேஷ்.ப, வசந்த்குமார்.தா மற்றும் சஷ்மிதன்.ந.ப ஆகியோர் கலந்துகொண்டு செயல்விளக்க நிகழ்ச்சியை மேற்கொண்டனர். இந்நிகழ்வில் உழவியல் துறை உதவிப் பேராசிரியர் கீர்த்தனா.சு. உடனிருந்து வழிகாட்டினார்.



எலுமிச்சை பயிரில் மஞ்சள் ஒட்டும் பொறி அமைப்பது குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம்



சேலம், நவ.3

கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் சார்பில், சேலம் மாவட்டம், மோரூர் கிராமத்தில் எலுமிச்சை பயிரில் மஞ்சள் ஒட்டும் பொறி அமைத்தல் மற்றும் முக்கிய பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சி விவசாயிகளுக்கு நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், எலுமிச்சை பயிரைத் தாக்கும் முக்கிய பூச்சிகளான அசுவினி, வெள்ளை ஈ, இலைப்பேன் மற்றும் இலைச் சுரங்கப்புழு போன்றவற்றின் தாக்குதல் அறிகுறிகள், அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்க மளிக்கப்பட்டது.

தொடர்ந்து, மஞ்சள் ஒட்டும் பொறியின் பயன்பாடு, அதை வயலில் சரியான முறையில் நிறுவும் விதம், செடிகளின் உயரத்திற்கு ஏற்ப பொறியை அமைத்தல் மற்றும் பூச்சிகளைக் கண்காணிப்பதன் முக்கியத்துவம் குறித்து நேரடி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மஞ்சள் நிறத்தால் ஈர்க்கப்படும் சில பறக்கும் பூச்சிகளைக் கண்காணித்து அவற்றின் எண்ணிக் கையைக் குறைக்க இப்பொறி எவ்வாறு உதவுகிறது என்பதும் விளக்கப்பட்டது.

காளான் வளர்ப்பு பற்றி வேளாண் மாணவர்கள் விவசாயிகளுக்கு செயல்விளக்கம்

திருச்சி, நவ.3

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டாரத்தில், நாளந்தா வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் செ.ஆதித்யன், பெ.அன்பழகன், செ.தேவஅபிசேக், க.தினேஷ், வி.மதுபாலன், செ.நிரஞ்சன், சு.ராஜேந்திர பிரசாத், அ.விஜயசாரதி, ரா.விஜேஷ்,

அ.விமல்ராஜ் மற்றும் கு.விஷ்ணு பிரசாத் ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.



இதன் உட்பிரிவாக, திண்ணியம் கிராமத்தில் காளான் வளர்ப்பு பற்றி விவசாயிகளுக்கு மாணவர்கள் களவிளக்கம் செய்தனர். காளானை வளர்க்க தேவையான பொருட்கள், உகந்த சூழ்நிலை, வளர்க்கும் முறை, அறுவடை பக்குவம், அதன் நன்மைகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து வேளாண் கல்லூரி மாணவர் ஆ.விமல் ராஜ் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

ரிஷியூர் கிராமத்தின் ஊரக கிராமப்புற மதிப்பேட்டை வரைந்த பொதுமக்கள்

நாகப்பட்டினம், நவ.3

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூரில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் இறுதியாண்டு மாணவிகளால் கிராம வரைபடம் வரையும் நிகழ்வானது சித்தமல்லி கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் கிராம மக்கள், உள்ளூர் பிரதிநிதிகள் மற்றும் மாணவிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வு மாணவர்களுக்கு கிராமப்புற சூழ்நிலை புரிந்து கொள்வதற்கும் கிராம மக்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்தது. இதில் கிராமத்தின் சமூக வரைபடம் மற்றும் வருடத்திற்கான நெல் சாகுபடியின் பட்டை விளக்கப்படம், பிரச்சனைகளுக்கான மர வரைபடம், வென் படம், மக்கள் தொகை விளக்க வரைபடம் ஆகியவற்றை வரைந்தனர். இதன் மூலம் இக்கிராமத்தின் வளங்கள் மற்றும் பயிர் சாகுபடியில் ஏற்படும் பிரச்சனைகள் குறித்த தகவல்களை மாணவிகள் சேகரித்தனர்.



Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741